## பாட விபரம் - ஆரம்பப் பள்ளி

உலக வெறிநோய் தினத்தில் பங்கேற்றமைக்கு நன்றி. இந்த தகவல்தாள் ஆரம்பப்பள்ளிகளுக்கான பாடதிட்டத்தைபற்றிய தகவல்களை அளிக்கிறது.

**கல்விதிட்டத்தின் முக்கியத்துவம்:**

கல்விதிட்டங்களின் மூலமே வெறிநாய்கடியினால் ஏற்படும் இறப்புகளை தடுக்க முடியும். குழந்தைகளுக்கு வெறிநாய்கடியை பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதன் மூலமும், அதை எவ்வாறு தடுத்து, வெளியேற்றலாம் என்பதை உணர்த்துவதன் மூலமும் நாம் இந்நோயினால் ஏற்படும் இறப்பை முழுமையாக தவிர்க்கும் நாளை நெருங்கிக் கொண்டிருக்கிறோம்.

வேறிநோய் தினத்தன்று இந்நோயைப் பற்றிய வழிப்புணர்வை குழந்தைகளுக்கு ஏற்படுத்துவதன் மூலம் அவர்கள் குடும்பத்திற்கும் இது போய்ச் சேர்கிறது.

**விழிப்புணர்வின் வெளிப்பாடு:**

இந்நிகழ்ச்சியில் பங்கு பெறுவதன் மூலமாக குழந்தைகள் கீழ்காணும் செய்திகளை அறிந்து கொள்கின்றனர்.

- வேறிநோயின் தாக்கம்
- அதை எப்படி தவிர்க்கலாம்
- நாய்கடியிலிருந்து நம்மை எப்படி பாதுகாக்கலாம்.
- இந்நோயை எவ்வாறு வெளியேற்றலாம்.

**பாடதிட்டத்தின் செயல் முறை எவ்வாறானது?**

இப்பயிற்சித்திட்டம் இருவகையான ஆய்வுகளை உள்ளடக்கியது. (பயிற்சிக்கு முன், பயிற்சிக்கு பின்). இப்பயிற்சியானது கேள்விபதில் மற்றும் புதிர் போட்டிகளைக்

கோண்டது. இக்கல்விப் பயிற்சிக்கு முன்பும் பின்பும் மாணவர்களின் திறனை ஆராய வேண்டும்.

இக்கல்விப் பயிற்சி மாணவர்களின் நினைவாற்றலை குறுகிய நேரத்தில் அறிந்து கொள்ள உதவும். இக்கல்வியானது பின்வரும் காலங்களில் வெறிநாய் கடியினால் பாதிக்கப்பட்ட குழந்தைகளின் எண்ணிக்கையை குறைக்கவும், தடுப்பூசி போடப்படும் நாய்களின் எண்ணிக்கையை அதிகரிக்கவும் உதவும்.

இக்கல்விமுறையானது மாணவர்களின் ஆர்வத்தை தக்கவைக்கும் வகையில் பலவகையான பயிற்சிகளைக் கொண்டது.

முக்கிய கருத்துகளை திரும்பத்திரும்ப நினைவு படுத்துவதன் மூலம் மாணவர்களின் நினைவுக்கூறல் திறன் அதிகரிக்கிறது. தாங்கள் அறிந்து கொண்ட கருத்துக்களை மேடை நாடகத்தின் மூலமாக மாணவர்கள் வெளிப்படுத்துவதன் மூலம் அவர்கள் உடல்திறன் மற்றும் கவனத்திறன் மேம்படுகிறது.

மாணவர்கள் இக்கல்விப் பயிற்சி முடித்துச் செல்லும்போது நாய்களின் மேல் பயம் மற்றும் வெறுப்பு இல்லாதவாறு உறுதி செய்யப்படுகிறது. மேலும் சில நாய்கள் அபாயகரமானவையாக இருந்தாலும் அவைகளை முறையாக பேணுவதன் மூலம் அவை சிறந்த செல்லப்பிராணிகளாக இருக்கும் என்பதை அவர்களுக்கு இப்பயிற்சி உணர்த்துகிறது.

**பாடத்திற்கு தேவையான பொருட்கள்:**

- கணினி மற்றும் திரையைக் கொண்ட வகுப்பறை
- பவர் பாயிண்ட் விளக்கங்கள் (விளக்க உரைகளை உள்ளடக்கியது)
- வெள்ளைத்தாள், வண்ண எழுத்துகோள் (சுவரொட்டி / ஓவிய வேலைகளுக்காக)